கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், 22, ராஜா முத்தையா சாலை, சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

.....

முன்னிலை : மேஜர்.வி.எஸ்.ஜெயகுமார் (ஓய்வு),
கூடுதல் இயக்குநர்.

இருப்பிடம் : சென்னை–600 003.

......

செயல்முறை ஆணை எண். 17863/2017/நிர்1 நாள் : 20.12.2021.

பொருள்: பணியமைப்பு – முன்னாள் படைவீரர் நலத்துறை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் – திரு.வெ. நந்தகுமார், த/பெ முபவீ எண். 2573850F சிப்பாய் கோ. வெங்கடேசன் – தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது – தொடர்பாக.

சுட்டு :
1. இணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–3 அவர்களின் செயல்முறை ஆணை எண்.17863/2017/நிர்1, நாள்.26.12.2018.
2. கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை–3 அவர்களின் கடித எண்.17863/2017/நிர்1, நாள்.26.02.2021.
3. அரசாணை (3ப) எண்: 8, பொது (முன்னாள் படைவீரர்)த் துறை, நாள் : 10.12.2021.

******

**ஆணை:**

சுட்டு (1)–ல் காணும் செயல்முறை ஆணையின்படி, திரு.வெ. நந்தகுமார், த/பெ முபவீ எண். 2573850F சிப்பாய் கோ. வெங்கடேசன் என்பவர் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் செய்து வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டதை தொடர்ந்து, 31.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.வெ. நந்தகுமார், என்பவர் பணியில் சேர்ந்த நாளான 31.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைபடுத்தி ஆணைகள் வழங்குமாறு

சுட்டு (2)-ல் காணும் கடிதத்தின் மூலம் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டதில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 31.12.2018-ல் 32 வயதினை கடந்திருந்ததால் பணியேற்பு செய்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய ஏதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதிகளில், விதி 28 மற்றும் பணப் பலன்களை நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28 (2) ஆகியவற்றை தனியர் சார்பாக தளர்வு செய்து அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது பணியானது பணியில் சேர்ந்த நாளான 31.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து சுட்டு (3)-ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வரசாணையில் முந்நாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் தனியர் அவற்றைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராவார் எனவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.21092/க்யூ2/2021-1, நாள். 04.12.2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.கு.எண்.38464/ஜி1/2021-1, நாள். 07.12.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வரசாணையின்படி, திரு.வெ. நந்தகுமார், இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 31.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் முதல் தனியர் அரசு விதிகளின்படி ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய உயர்வு நிலுவை ஏதுமிருப்பின் அவற்றையும் பெற தகுதியுடையவர் ஆகிறார்.

திரு.வெ. நந்தகுமார், இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, 31.12.2018 முற்பகல் முதல் தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலத்தில், இரண்டு ஆண்டு காலங்கள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

தனியர், தகுதிகாண் பருவகாலத்தில் கீழ்க்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்.
2. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சி.

........3

பணியாளரின் பணிப்பதிவேடு மற்றும் பணிவரன்முறைப்படுத்தும் பதிவேட்டிலும் உரிய பதிவுகள் செய்திடுமாறு வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இச்செயல்முறை ஆணை பெற்றுக்கொண்டமைக்கு ஏற்பளிப்பு செய்தல் வேண்டும்.

(ஒம்)/- வி.எஸ்.ஜெயகுமார்.
கூடுதல் இயக்குநர்.

<u>பெறுநர்</u>

திரு.வெ. நந்தகுமார்,
இளநிலை உதவியாளர்,
முன்னாள் படைவீரர் நல அலுவலகம்,
வேலூர் மாவட்டம். – உதவி இயக்குநர் மூலமாக.

<u>நகல்:</u>

1. இயக்குநரின் நேர்முக உதவியாளர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், சென்னை-03.
2. <u>(பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்)</u>
உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நல
அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

சுட்டு (3)-ல் குறிப்பிடப்பட்ட அசல் அரசாணை, திரு.வெ. நந்தகுமார், இளநிலை உதவியாளரின், கீழ்க்காணும் அசல் ஆவணங்கள் மற்றும் அசல் பணிப்பதிவேடு ஆகியன இச்செயல்முறை ஆணையுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. திரு.வெ. நந்தகுமார், இளநிலை உதவியாளரிடம் அசல் ஆவணங்களை வழங்கி ஏற்பளிப்பு பெற்று இயக்ககத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

திரு.வெ. நந்தகுமார், இளநிலை உதவியாளரின் அசல் சான்றிதழ்கள் :-

1. Matriculation Examination Mark Sheet No. MAT 0028669.
2. வேலூர் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ் ப.மு.சி4/4368/2017 (வ.எண்.897.2017), நாள். 22.09.2017.

......4

3. வேலூர் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட வருவாய் சான்றிதழ் மூ.மூ.சி2/1183/2020 (வ.எண்.149/2020), நாள். 29.07.2020.

4. Disability Certificate (Battle Casualty) issued by Artificial Limb Centre, Pune, Dated. 22.03.1988 (In Original).

3. மாவட்ட கருவூல அலுவலர், வேலூர் மாவட்டம்.

4. நிர்வாகம் பிரிவு – 3.

5. முதன்மை ஆணைத் தொகுப்பு.

6. இருப்புக்கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

இயக்குநரின் நேர்முக உதவியாளர்.

21/12/2021